**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்**

முன்னிலை – திரு. P.காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.

**2026 ஜூலை–10–ம் நாள் வெள்ளிக்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி–26–ம் நாள்

**M.C. No.35/2025**

**CNR.No: TNTH07-003902-2025**

*****

V.பசுங்கிளி (வயது 52/2025),
க/பெ.லேட்.A.வாசகர்,
கள்ளர் பள்ளித்தெரு,
கருணாக்கமுத்தன்பட்டி,
உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். ... மனுதாரர்

/எதிரிடை/

V.ஆனந்த் (வயது 39/2025),
த/பெ.லேட்.A.வாசகர்,
ஹவுஸ் எண்.32,
கருணாக்கமுத்தன்பட்டி,
கீழக்கூடலூர்,
உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 18.11.2025ம் தேதி எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்து, 25.11.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சரவணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜராகி, எதிருரை தாக்கல் செய்யாததால், அவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலித்தும் இம்மனுவில் இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

<u>1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:</u>

1.1) எதிர்மனுதாரர், மனுதாரரின் மூத்த மகன் ஆவார். மனுதாரருக்கும், அவரது கணவருக்கும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இந்த இல்லற பந்தத்தின் மூலம் இவர்களுக்கு எதிர்மனுதாரர் மகனும், ஒரு மகளும் உள்ளனர். மனுதாரர் தனக்கு சீதனமாக வந்த நகைகளை விற்று அந்தப்பணத்தில் எதிர்மனுதாரரின் படிப்புச் செலவுகளை மேற்கொண்டார். எதிர்மனுதாரர் இந்திய இராணுவத்தில் நல்ல வேலை வாய்ப்பு கிடைத்தது. வெளி ஆட்களிடம் வட்டிக்கு பணம் கடன் வாங்கி மனுதாரரின் மகளுக்கு திருமணம் செய்து வைத்தனர். எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைக்க முனைந்த போது, தனக்கு சொந்த வீடு கட்டிக்கொடுத்தால் மட்டுமே திருமணம் செய்து கொள்வேன் என்று வற்புறுத்தியதால், மனுதாரரும் அவரது கணவரும் ஊர் முழுவதும் கடன் வாங்கியும், தனது கணவரின் சொத்துக்களை விற்றும் ரூ.40 இலட்சம் செலவில் எதிர்மனுதாரருக்கு ஒரு ஆடம்பரமான வீட்டை கட்டி திருமணத்தையும் வெகு விமரிசையாக நடத்தி வைத்தனர்.

1.2) எதிர்மனுதாரரிடம் கடனை அடைக்க உதவுமாறு கேட்டபோது, தன்னால் முடியாது என்று வெளிப்படையாக மறுத்துவிட்டார். எதிர்மனுதாரர் இராணுவத்தில் நாயக் ஆக பணிபுரிந்து மாதம் ரூ.1,30,000/- சம்பாதித்து வருகிறார். மனுதாரரும், அவரது கணவரும் கடன்பட்டு, தங்கள் சொத்தை விற்று கட்டிக்கொடுத்த வீட்டிலேயே அவர்களை குடியிருக்க விடாமல், வீட்டை விட்டு ஈவிரக்கமின்றி விரட்டிவிட்டார். இதனால் மனுதாரரும், அவரது கணவரும் கூலி வேலை செய்து வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மனுதாரரின் கணவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். தனது தந்தையில் கடைசி கால மருத்துவ செலவை ஏற்குமாறு கோரியபோதும், எதிர்மனுதாரர் அதனையும் ஏற்க மறுத்துவிட்டார். மனுதாரரின் கணவர் சமீபத்தில் இறந்துவிட்டார். மனுதாரர் வயது மூப்பின் காரணமாக வேலைக்கு செல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எனவே, மனுதாரருக்கு மாத ஜீவனாம்சமாக ரூ.20 ஆயிரம் இம்மனு தாக்கல் செய்த தேதியில் இருந்து எதிர்மனுதாரர்

வழங்க மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜராகி, எதிருரை தாக்கல் செய்யாததால், அவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>3. மனுவில் தீர்மானிக்க வேண்டிய சங்கதிகள்.</u>

**i) மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஜீவனாம்ச மனு அனுமதிக்கத்தக்கதா?**

**ii) அவ்வாறு அனுமதிக்கத்தக்கது என்றால், எதிர்மனுதாரர் எவ்வளவு தொகை ஜீவனாம்சம் செலுத்த கடமைப்பட்டவர்?**

5) இவ்வழக்கில் மனுதாரர் தாயாரும், எதிர்மனுதாரர் மகனும் ஆவார். மனுதாரருக்கும், வாசகர் என்பவருக்கும், சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்று, எதிரிமனுதாரரும், மற்றொரு மகளும் பிறந்துள்ளார்கள். மகள் திருமணமாகி தனியாக குடும்பம் நடத்தி வருகிறார். மனுதாரரும், அவரது கணவரும் மிகுந்த சிரமப்பட்டு, எதிர்மனுதாரரை வளர்த்து ஆளாக்கி, சுமார் 40 லட்சம் பெருமானமுள்ள வீடு கட்டி கொடுத்துள்ளார்கள். 2008 ல் இராணுவத்தில் பணியில் சேர்ந்த எதிர்மனுதாரர் தற்போது வரை இராணுவத்தில் பணியாற்றி வருகிறார். எதிர்மனுதாரர் இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறார் என்பதற்கு ஆதரவாக எதிர்மனுதாரரின் பணி அடையாள அட்டை ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரரின் கணவர் 24.08.2025 ல் இறந்துள்ளார். அதற்கு ஆதவாக மனுதாரரின் கணவரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தனது கணவரின் இறப்பிற்கு பின்னர் மனுதாரர் எவ்வித ஆதரவுமின்றி தனது அன்றாட தேவைகளுக்கே மிகுந்த சிரமப்பட்டு வருவதாக மனுதாரர் சொல்லியுள்ளார். இதனை மறுக்கும் விதமாக எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. மாதச்சம்பளமாக ரூ.1,30,000/- எதிர்மனுதாரர் பெற்றுவருவதாக மனுதாரர் சொல்லியுள்ளபோதிலும், அதற்குரிய ஆவணங்களை

தாக்கல் செய்யவில்லை. மகன் என்ற முறையில் தனது தாயாரான மனுதாரரை பராமரிக்க எதிர்மனுதாரர் சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார். ஆகவே, மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/- மாதாந்திர ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் இம்மனு தாக்கல் செய்த 18.11.2025ம் தேதியிலிருந்து வழங்கவேண்டும் என்றும், மேலும் இம்மனு செலவு தொகையாக ரூ.10,000/- மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்தி வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மாதாந்திர ஜீவனாம்ச நிலுவைத் தொகைகளை மூன்று மாத காலத்திற்குள் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, பின் இன்று 2026-ம் வருடம் ஜூலை மாதம் 10-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

<u>மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>:-

| வ.எண் | சாட்சிகள் | விசாரித்த நாட்கள் | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|---|
| 1 | ம.சா.1 | 07.07.2026 | பசுங்கிளி |

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:-

| வ.எண் | | சான்றாவணங்கள் |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

| | | |
|---|---|---|
| 2 | ம.சா.ஆ.2 | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| 3. | ம.சா.ஆ.3 | எதிர்மனுதாரரின் பணி அடையாள அட்டை நகல் |
| 4. | ம.சா.ஆ.4 | 24.08.2025 ம் தேதியிட்ட எனது கணவரின் இறப்பு சான்றிதழ் நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை.

**<u>குறிப்பு:</u>**

1) எந்தவொரு சாட்சியும் வழக்கு விசாரணையின்போது 3 வாய்தாவிற்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2) உத்தரவு நகல் மனுதாரருக்கு வழங்குக.

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.07.10 18:43:45 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.